R4788

## THE FIG TREE IS WITHERED AWAY

## அத்திமரம் பட்டுப்போயிற்று

"பேதுரு நினைவுகூர்ந்து, அவரை நோக்கி: ரபி, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று என்றான்." மாற்கு 11:21

இந்த குறிப்பிட்ட நிகழ்வு நமது கர்த்தரின் பூமிக்குரிய ஊழியத்தில் மிகவும் குறிப்பிடத்தகுந்தது என்று நாம் கருதுகிறோம். அவரது கிரியைகள் எல்லாம் இப்போதைக்கு மட்டுமல்ல, வரக்கூடிய பெரிய காரியங்களுக்கும் சித்திரங்களாக இருந்தன. பிசாசுகளை துரத்துதல் முதலானவைகள் வரவிருக்கிற அவரது ராஜ்யத்தின் மகிமையை காட்டியது, அவரது ராஜ்யம் வரும் போது குருடரின் கண்கள் திறக்கப்படும்; முடவர்கள் அனைவரும் நடப்பார்கள்; உலகத்திற்கு ஆரோக்கியமும் ஆசீர்வதங்களும் இருக்கும். சகல பிசாசுகளும் துரத்தப்படும்.

கர்த்தர் பூமியில் இருந்த போது, வியாதியஸ்தர்கள் அனைவரையும் குணப்படுத்த முயலவில்லை. பெதஸ்தா குளத்தின் அருகேயுள்ள மண்டபத்தில் வியாதியஸ்தனாயிருந்த ஒருவனை நாம் நினைவு கூருகிறோம். இயேசு அவனிடம் வந்து கூறியதாவது: "எப்படி நீ இங்கே இருக்கிறாய்?" அவன் பதில் கூறியதாவது: "தண்ணீர் கலக்கப்படும் போது வேறொருவன் எனக்கு முந்தி இறங்கி விடுகிறான்." இயேசு அவனை நோக்கி, "எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட" என்று கூறினார். மற்றவர்களிடம் எதையும் சொல்லவில்லை. எல்லா வியாதியஸ்தரர்களையும் சுகப்படுத்த அவர் முயற்சி செய்யவில்லை. அவர் தமது வல்லமையை காண்பித்தார். அவர் தமது மகிமையான ராஜ்யத்தை முழுவதுமாக ஸ்தாபிக்கும் போது தமது வல்லமை முழுவதையும் பயன்படுத்துவார்.

காரியங்களை நாம் சரியான முறையில் எடுத்துக்கொள்ளுகிறோம் என்று நினைக்கிறோம். சிறிய காரியங்களாக இருந்தாலும் கர்த்தராகிய இயேசுவின் ஒவ்வொரு சிறு கிரியையும் வரக்கூடிய பெரிய காரியங்களுக்கு தீர்க்கதரிசன பொருளை உடையதாக இருக்கிறது. உதாரணத்திற்கு அவர் இரவிலே படகுக்குள் வருகிறார். ஒரு பெரிய புயல் வந்தது. இயேசு படகுக்குள் வந்தவுடனேயே படகு அவர்கள் போகவேண்டிய கரைக்கு சென்றடைந்தது.

நாம் இப்போது கவனிக்கிற பாடத்தில் இயேசு ஒரு இடத்திற்கு வந்தார். அங்கே ஒரு அத்திமரம் இருந்தது என்று வாசிக்கிறோம். "அத்திப்பழ காலமாயிராதபடியினால்" என்று பொதுவான மொழிபெயர்ப்பில் வாசிக்கிறோம். றானால் "அத்திப்பழ காலம் முடிவடையாதபடியால்" என்று சரியானபடி வாசிக்க வேண்டும். அத்திப்பழ காலத்திற்கு முன்னரே பழத்தை காண இயேசு வந்தது விநோதமாக இருக்கிறது.

அவர் அத்திமரத்தை பார்த்து கூறியதாவது: "இது முதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியை புசியாதிருக்கக்கடவன்." அதன் பின்னர் அந்த அத்திமரம் வேரோடே பட்டுப்போயிருக்கிறதைக் கண்டு பேதுரு, "ரபி சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று" என்று கூறினார். அதற்கு இயேசு"தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாக இருங்கள்" என்று கூறினார். இதன் காரணமென்ன?

### அத்திமரத்திலே இளங்கிளை தோன்றி துளிர்விடும் போது, கோடை காலம் சமீபமாகிவிட்டது என்பதை அறிந்துகொள்ளுங்கள்

அத்திமரம் என்பது யூத தேசத்தை ஒரு நிழலாக அல்லது ஒரு சித்திரமாக காண்பிக்கிறது என்பது நமது புரிந்து கொள்ளுதலாக இருக்கிறது. இயேசு அவர்களிடம் சரியான காலத்தில் வந்து கனிகளை எதிர்பார்த்தார். ஆனால் யூதர்களிடம் வந்து அந்த தேசத்தின் கனியைக் காணவில்லை. தேசத்தின் தலைவர்கள் விழுந்து போனார்கள். ஆயக்காரரும் பாவிகளுமே அவரது செய்தியைக் கேட்க ஆயத்தமாக இருந்தார்கள். தேசத்தின் மேல் அழிவு வந்தது நினைவு கூரப்படுகிறது. இயேசு தனது ஊழியத்தின் கடைசியில் மலையில் ஏறிச் செல்லுகையில் எருசலேமைப் பார்த்து, "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளை கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களை கல்லெறிகிறவர்களே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளை கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன். உங்களுக்குகோ மனதில்லாமல் போயிற்று. இதோ உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்படும்" என்று கூறினார். (லூக்கா 13:34,35) சீக்கிரத்தில் அது தன் வல்லமையை இழக்க ஆரம்பித்தது. யூத தேசம் 37 வருடங்களுக்கு பிறகு கிபி 70இல் தனது தனித்தன்மையை இழந்தது.

இப்படியாக யூத தேசமானது கல்லறையில், ஹேடஸில் (Hades) இருக்கும் பொழுது, இப்படி இருப்பதாக சொல்லப்படுகிறது. உண்மையில் தனிப்பட்டவர்களாக அவர்கள் கல்லறைக்குச் சொன்றிருக்கிறார்கள். ஆனால் தேச அளவிலும் கூட அவர்கள் கல்லறைக்கு சென்றிருக்கிறார்கள், யூத தேசத்திற்கு உயிர்த்தெழுதல் உண்டு என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. "ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்துக் கொண்டது" என்று கூறி அதன் எழுப்புதலை சித்திரமாக காட்டுகிறது. (எசேக்கியேல் 37:7) இந்த எலும்புகள் இஸ்ரயேல் வம்சத்தாரை குறிக்கிறது. "எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று" என்று குறிப்பிடப்படுகிறது. (வசனம் 11) எங்கள் இலட்சியங்கள் எல்லாம் போய்விட்டன அல்லது உறங்கிவிட்டன!

அந்த தேசத்தின் ராஜ்ய நம்பிக்கைகள் மறுபடியும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று தேவன் அவர்களுக்கு சொல்லுகிறார். இயேசு தமது சீஷர்களிடம் பிரசங்கித்த பிரசங்கங்கள் ஒன்றில், அத்திமரம் துளிர்விட்டு அதில் இலைகள் தோன்றும் போது கோடைகாலம் சமீபித்திருக்கிறது என்பதை நாம் அறிய வேண்டும் என்ற கூறுகிறார். அத்திமரம் துளிர்விட்டு இலைகள் தோன்றுவதை நாம் பார்க்கிறோம். (மத்தேயு 24:32; மாற்கு 13:28) யூதர்கள் எருசலேமை திரும்பிப் பார்க்கிறதை நாம் காண்கிறோம். அத்திமரம் துளிர்விட்டு இலைகள் தோன்றுவதை அல்லது ஜீவனை பெறுகிறதை நாம் பார்க்கிறோம். யூத தேசம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படுவதற்கான காரியங்களை அவர்கள பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட யூத தேசம் மறுபடியும் இருக்கும் என்று தேவன் கூறுகிறார்.